அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 25/94

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு - 07.
1994 யூலை மாதம் . 18 . ஆந்திகதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் பிரதான செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
ஆளுநர்களின் செயலாளர்கள்,
அரச கூட்டுத்தாபனங்களின் தலைவர்கள்,
வங்கிகள், நிதி நிறுவனங்கள் மற்றும் அரச துறையின்
தொழில் முயற்சிகளின் அதிகாரிகள் அனைவருக்கும்.

புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் அலுவலகத்தில்
அலுவலகப் பணியாளர் தொகுதியின் தேவைகள்.

மேற்படி விபரம் தொடர்பில் வெளியிடப்பட்ட 5/91 ஆம் இலக்க 1991.02.17 ஆந் திகதிய அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை மீது உங்கள் கவனம் கோரப்படுகின்றது.

02. புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் அலுவலகத்தில் கடமையாற்றும் பணியாளர் தொகுதி அமைச்சுகள்/திணைக்களங்கள்/கூட்டுத்தாபனங்கள்/படைதாங்கு சேவைகள்/வங்கிகள்/சபைகள்/மற்றும் தொண்டர் இயக்கங்களிலிருந்து பெறப்பட்ட உத்தியோகத்தர்களை உள்ளடக்கியுள்ளது. அதனால், அரசாங்கத்தின் தேவைக்கேற்ப இணைக்கப்பட்ட இத்தகைய உத்தியோகத்தர்களை மீளத்தரும்படி வழங்கப்படும் சம்பளங்கள் கூடச் சில நிறுவனங்களால் நிறுத்தப்பட்டுள்ளன. இதன் விளைவாகப் புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் அலுவலகத்தின் அரசகரும நடவடிக்கைகளைச் சிறந்த முறையில் ஆற்ற முடியாதுள்ளது.

03. அரசாங்கத்தின் தேவைகளுக்கேற்பப் புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் அலுவலகம் ஆரம்பிக்கப்பட்ட திகதியாகிய 1990.01.03 ஆம் திகதி தொடக்கம் அது மூடப்படும் வரை அவ்வலுவலகத்தில் பணியில் ஈடுபடுத்தியுள்ள பல்வேறு அமைச்சுகள்/ திணைக்களங்கள், உள்ளூராட்சி நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள், படைதாங்கு சேவைகள், சபைகள், வங்கிகள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்கள் அனைத்தையும் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கு ஆணையாளர் நாயகம் அலுவலகத்தில் பணியாற்றும் காலத்தில் அவர்களின் சேவை தொடர்பில் உரித்தான வேதனங்கள்/ஆண்டேற்றங்கள்/படிகள், பதவி உயர்வுகள் மற்றும் உரித்துடைய ஏனைய நன்மைகளும் சம்பந்தப்பட்ட அமைச்சுகள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், படைதாங்கு சேவைகள், சபைகள், வங்கிகள், மற்றும் ஏனைய அரச நிறுவனங்கள் மூலமாகவே வழங்கப்பட வேண்டுமென்று அரசு தீர்மானித்துள்ளது. அதன்படி செயற்படுக.

ஒப்பம்: வை. பீ. புஸ்ஸெதெனிய,